சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.எண்.92/2020

2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.ஜூலியட் லில்லி புளோரா, பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமார் | வயது | 54 |
| த/பெ | ரங்கசாமி | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | பிள்ளையார் கோவில் வீதி, காரமடை | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | விவசாயம் |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பு விசாரணை :

இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகப் பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் புல எண் தெரியுமா என்றால் புல எண்.281 ஆகும். தாவா சொத்தில் என்ன அடிப்படையில் நான் பாகம் கேட்கிறேன் என்றால் எனது தாத்தாவின் சொத்து என்ற அடிப்படையில் பாகம் கேட்கிறேன். என் தாத்தா பெயர் என்ன என்றால் ராமைய கவுடர். ராமைய கவுடருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் எனது அப்பா ரங்கசாமி, என் அப்பாவுடன் பிறந்த சகோதரிகள் ருக்மணி, உவ்வாக்காள், சாமக்காள் ஆகியோர்கள். என் அப்பாவுடன் பிறந்த சகோதரிகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரி தான். எனது தாத்தா ராமைய கவுடர், எனது அப்பா ரங்கசாமி மற்றும் 1-ம் பிரதிவாதியான எனது அண்ணன் ராஜப்பன் ஆகியோர்கள் 04.02.1961 அன்று எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரி தான். அந்த சொத்தினை ரூ.3,000/- ற்கு விற்பனை செய்தார்கள் என்றால் சரி தான். கிரையத் தொகை ரூ.3000 ல் எனது தாத்தா ராமைய கவுடர் தன்னுடைய பங்காக ரூ.1000/- யை எடுத்துக்கொண்டார் என்றால் இல்லை. மீத கிரையத் தொகை ரூ.2,000/- யை எனது தகப்பனார் ரங்கசாமியும், எனது சகோதரரான 1-ம் பிரதிவாதியும் எடுத்துக் கொண்டு பிராது தபசில் சொத்து கிரையம் பெற்றார்கள் என்றால் சரி தான். பூர்வீக சொத்தை விற்று அந்த பணத்தில் பிராது தபசில் சொத்தை கிரையம் பெற்றார்கள். பூர்வீக சொத்து என்றால்

எனது தாத்தாவின் சொத்து என்றால் சரி தான். பூர்வீக சொத்தை விற்று வந்த பணத்தில் எனது தாத்தாவின் பங்கான ரூ.1000/- யை அவர் எடுத்துக் கொண்டார் என்றால் இல்லை. அவ்வாறு எடுத்துக் கொண்டதால் அதன் பிறகு வரும் சொத்துக்கள் எனக்கு பூர்வீக சொத்துக்கள் அல்ல என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தை எனது அப்பாவும், எனது அண்ணனும் தங்களது தனிப்பட்ட பணத்தை வைத்து தான் வாங்கியதால் அது அவர்களது தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. அது பூர்வீக சொத்து விற்று வந்த பணத்தில் வாங்கியது ஆகும். எனது தாத்தா அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை விற்று பணத்தைப் பெற்றுக் கொண்டதால் தற்போது அவருக்கு பிராது தபசில் சொத்தை எந்த பாகமும் இல்லை என்றும், அதனால் அவரது சொத்தில் நான் பாகம் கேட் முடியாது என்றால் சரியல்ல. எனது அப்பாவும், 1-ம் பிரதிவாதியும் தனிப்பட்ட முறையில் வாங்கிய பிராது தபசில் சொத்தில் நான் பங்கு கேட்க முடியாது என்றால் பூர்வீக சொத்தை விற்று வந்த பணத்தில் பிராது தபசில் சொத்துக்களை வாங்கியதால் அதில் பங்கு கேட்கிறேன். பூர்வீக சொத்து என்றால் தாத்தாவின் சொத்து என்றால் சரி தான். அந்த சொத்தை எனது தாத்தா விற்று விட்டதால், எனக்கு பிராது தபசில் சொத்தில் எந்த பங்கும் இல்லை என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்து எனது அப்பா மற்றும் 1 ம் பிரதிவாதியும் தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. எனது அப்பாவின் சொத்தில் நான் பங்கு கேட்கிறேனா என்றால் ஆமாம். எனது அப்பா ரங்கசாமி அவருடைய பங்கை 3 ம் பிரதிவாதியான மாதையனுக்கு 1970 ம் ஆண்டில் விற்று விட்டார் என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு விற்பனை செய்த விபரம் எனக்கு இந்த வழக்கினை தாக்கல் செய்வதற்கு முன்னர் தெரியும் என்றால் தெரியாது. எப்போது தெரிய வந்தது என்றால் எனது அப்பா இறந்தவுடன் தெரிய வந்தது. என் அப்பா இறந்து 5 வருடங்கள் ஆகிவிட்டது. எனது அப்பா அவரது பங்கை 3 ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த விபரம் எனக்கு ஏற்கனவே தெரியும் என்றும், வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னரே அது பற்றிய விவரம் எனக்கு தெரிந்ததால் தான் அந்த கிரைய ஆவணத்தை என் தரப்பு ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி தான். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் 4 ஏக்கர் 64 செண்ட் ஆகும். எனது அப்பா

ரங்கசாமி 2 ஏக்கர் 32 செண்டை 3 ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து விட்டார் என்றால் அவ்வாறு விற்பனை செய்தது எனக்கு தெரியாது. மீதமுள்ள 2 ஏக்கர் 32 செண்டை 1 ம் பிரதிவாதி அவரது பெயருக்கு பட்டா மாற்றம் செய்து, அவரது தனிப்பட்ட சொத்தாக அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதியும், அவருடைய பங்கு சொத்தை 10.11.2018 அன்று 5 ம் பிரதிவாதியான அவரது மகன் சஞ்சீவ் குமார் என்பவருக்கு செட்டில் மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல. 10.11.2018 முதல் 5 ம் பிரதிவாதியான சஞ்சீவ் குமார் தான் அந்த சொத்தினை அடைந்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 5 ம் பிரதிவாதி பெயரில் தான் 2 ஏக்கர் 32 செண்டிற்கான பட்டா உள்ளிட்ட வருவாய் ஆவணங்கள் உள்ளன என்றால் சரியல்ல. அந்த சொத்து அவருடைய அனுபவத்தில் தான் தற்போது வரை உள்ளது என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதியான மாதையன் அவரது மகனான 4 ம் பிரதிவாதி செந்தில் குமாருக்கு 19.08.2015 அன்று விற்பனை செய்து விட்டார் என்றால் சரியல்ல. அதனால் எங்கள் குடும்பத்திற்கு என்று எந்த சொத்தும் இல்லை என்றால் சரியல்ல. எங்கள் தாத்தா சொத்தை விற்பனை செய்த போது, நான் பிறக்கவில்லை என்றால் எனது அக்கா பாப்பாத்தியும், அண்ணன் ராஜப்பனும் பிறந்து விட்டார்கள். எனது அக்காவான பாப்பாத்திக்கு பிராது தபசில் சொத்தில் பாகம் கேட்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. 2 முதல் 5 வாதிகள் யாரும் எங்கள் தாத்தா கிரையம் கொடுத்த காலத்தில் பிறக்கவில்லை என்பதால் பிராது தபசில் சொத்தில் பங்கு கேட்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. 6 வது வாதி எனது தாயார். 6 வது வாதி எனது தகப்பனாரின் சொத்தில் தான் பங்கு கேட்க முடியுமே தவிர, எனது தாத்தாவின் சொத்தில் பங்கு கேட்க முடியாது என்றால் சரியல்ல. எனது அப்பா அவருடைய பங்கு சொத்தினை விற்பனை செய்து விட்டதால் பிராது தபசில் சொத்தில் 6 ம் வாதி பங்கு கேட்க முடியாது என்றால் சரியல்ல. எனக்கு பூர்வீகமாக திம்மண்ண கவுண்டன் புதூரில் ஒரு வீடு உள்ளது என்றால் சரி தான். அந்த வீட்டினை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரி தான். அதனால் பகுதியாக பாகம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது அப்பாவுடன் பிறந்த சகோதரிகளை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு

நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தின் ஒரு பகுதி 1 ம் பிரதிவாதிக்கும், அதன் பிறகு 5 ம் பிரதிவாதிக்கும் மட்டுமே தனித்து பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அந்த சொத்தில் பாகம் கேட்க எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவும் அவருடைய பங்கை 3 ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து அவரும் 4 ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து விட்டதால் அந்த சொத்திலும் நாங்கள் பங்கு கேட்க முடியாது என்றால் சரியல்ல. எனக்கு 2 ம் பிரதிவாதியான லவகுசா என்ற ஒரு சகோதரர் இருக்கிறார் என்றால் சரி தான். நானும், அவரும் இரட்டைப் பிறவிகள். அவருக்கும் விவரம் எல்லாம் தெரியும் என்பதால் தான் அவர் இந்த வழக்கினை நடத்த வரவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் அவரை பிரதிவாதிகளில் ஒருவராக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்களுக்கு பாத்தியமே இல்லாத பிராது தபசில் சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தது செல்லாது என்றும், வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மற்ற பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒம்/- G.Gengaraj

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.